**செய்தி வெளியீடு எண்: 786** **நாள்: 29.10.2018**

# செய்தி வெளியீடு

பதிவுத்துறைக்கான ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான ஸ்டார் 2.0 திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.2.2018 அன்று துவக்கிவைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மையநோக்கம் "எளிய மற்றும் வெளிப்படையான பதிவுமுறை" என்பதாகும்.

ஸ்டார் 2.0 திட்டத்தின் மையநோக்கத்திற்கு ஏற்ப முன்பதிவு செய்த நாள் மற்றும் நேரத்தின் அடிப்படையில் வரிசைக்கிரமமாக (First In First Out) ஆவணம் பதிவு செய்தல், ரசீதில் ஆவணம் திரும்ப வழங்கப்படும் தேதி/நேரம் அச்சிடுதல், பதிவு மறுக்கப்படின் பதிவு மறுப்புச்சீட்டு வழங்குதல், ஆவணத்தின் நிலை குறித்து குறுஞ்செய்தி (SMS) அனுப்புதல் மற்றும் ஆவணத்தின் மீது எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை வெளிப்படையாக இணையதளத்தில் அறிந்து கொள்ளுதல் ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பதிவு நடைமுறையில் ஒரு வெளிப்படைத்தன்மை இம்மென்பொருள் வழியாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதன் அடுத்தகட்டமாக பதிவுத்துறை தொடர்பாக வெளியிடப்படும் அரசாணைகள், சுற்றறிக்கைகள் மற்றும் செய்தி வெளியீடுகள் ஆகியவற்றை பொதுமக்கள் எளிதாகவும் விரைவாகவும் பார்வையிடும் வண்ணம் **பதிவுத்துறையின் இணையதளத்தில்** "சுற்றறிக்கைகள்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த "சுற்றறிக்கைகள்" என்ற தெரிவை பதிவுத்துறையின் **https://tnreginet.gov.in** என்ற இணையதளத்தில் பொதுமக்கள் தெரிவு செய்து முத்திரைத் தீர்வை, பதிவுக்கட்டணம், வழிகாட்டி மதிப்பு, போலி ஆவணப்பதிவை தடுத்தல், முன்பதிவு சரிபார்த்தல், அதிகார

Verified @ RegEstate

ஆவணங்கள் (Power of Attorney), மனைப்பிரிவு, 47A தொடர்பானவை போன்ற பல்வேறு தலைப்பின் கீழ் தேதிவாரியாகப் பார்வையிடலாம். மேலும் தேவைப்படின் அவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், அவ்வப்போது வெளியிடப்படும் பொது முக்கியத்துவம் வாய்ந்த அரசாணைகள், சுற்றறிக்கைகள் மற்றும் செய்தி வெளியீடுகள் உடனுக்குடன் இணையதளத்தில் உரிய தலைப்பின் கீழ் பதிவேற்றம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

Verified RealEstate